## சென்னைப் பெருநகர மாநகராட்சியில்

# பருவமழை - பேரிடர் மேலாண்மை குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று உரிய ஆலோசனைகள் வழங்கினார்!

சென்னை,செப்.6-

**சென்னை பெருநகர மாநகராட்சியில், வடகிழக்குப் பருவமழைக் காலத்தையொட்டி, பேரிடர் காலங்களை எதிர்கொள்ளும் வகையில் சென்னை மாநகரில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப்பணிகள்குறித்த இரண்டாவது ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அவரவர் தொகுதி வாரியாக ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த விளக்கங்களை, அந்தந்தத் துறைகளின் அரசு அதிகாரிகள் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வலர்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து, பருவமழைக் காலத்தை எதிர்கொள்வோம் எனக் கூறினார்.**

**மேலும், பருவமழையின் போது, பொது மக்கள் பாதிக்காத வண்ணம் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தொடர்ந்து கண்காணித்திடவும் அவற்றைச் சரிசெய்திடவும் ஆலோசனைகளை வழங்கிப் பேசினார்.**

அப்போது அவர் கூறியதாவது:

கடந்த ஆய்வுக் கூட்டத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள், சந்தேகங்களுக்கு நம் அரசு அதிகாரிகள், உரிய விளக்கத்தையும் திட்டங்களின் தற்போதைய நிலைமையையும் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட திட்டப் பணிகள் முன்னேற்றம், தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து, குறிப்பிட்ட இடைவேளையில் ஆய்வுக்கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### உரிய நடவடிக்கை

கடந்த மழையின் போது, தொகுதியில் எங்கெங்கு மழைநீர் தேங்கியது என்ற பட்டியலை, சட்டமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுப் பெறப்பட்டுள்ளது. வருகின்ற மழைக்கு அந்தப் பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு, உரிய நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும், எடுக்கப்பட வேண்டும்.

வடிகால்களைத் தூர் வாரினால்தான், சாலைகளில் தண்ணீர் தேங்காமல், நீர் கால்வாய்களில் வடியும் என்பதால், கால்வாய்களைத் தூர்வாரும் பணிகளை ஓய்வின்றித் தொடர்ந்து செயல்படுத்துமாறு மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்ற போதுமான மோட்டார் பம்புகளை வெளியூர்களிலிருந்து மழை தொடங்குவதற்கு முன்பே இங்கு கொண்டு வந்திருப்பதை உறுதிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### நிவாரண முகாம்கள்

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்டு, தங்க வைக்கும் நிவாரண முகாம்களை சுகாதாரமான முறையில் பராமரிக்க வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், பால், பாய், போர்வைப் போன்ற அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்வதற்கு, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இப்போதே தயாராக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பம்பிங் ஸ்டேஷன்கள், மழைக் காலத்திலும் தொடர்ந்து இயங்க, அதன் தொழில்நுட்ப உத்தரவாதத்தை உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகள் சில சேதமடைந்து உள்ளதாகவும், அங்குள்ள மக்களை வேறு இடத்திற்கு சில சட்டமன்ற உறுப்பினர்கள் மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களை மழைக்கு முன்னதாகவே வேறொரு இடத்திற்கு மாற்றுவது அவசியம். அந்த பணிய நாம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### மழைநீர் வடிகால்

மழைநீர்வடிகால், கழிவுநீர்க் குழாய்களில் தேங்கியுள்ள அடைப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வது குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். `மேன் ஹோல்' பகுதியில் தேங்கியுள்ள கழிவுகளை எடுப்பதற்காகவும், இரண்டு மேன் ஹோலுக்கு இடைப்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு உறுதி செய்யவேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதில் எந்தவிதமான சமரசமும் செய்யக்கூடாது என்பதை, இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மற்ற அனைத்துப் பணிகளையும் சிறப்பாக மேற்கொண்டாலும், ஒரு நாளைக்கு மேல் மின்சாரம் இல்லை என்றால், நம் ஒட்டுமொத்த பணிகளையும் மக்கள் கேள்விக்கு உட்படுத்திவிடுவார்கள்.

அதனால், மழைநேரத்தில் மின்வாரியப் பணி என்பது மிகமிக முக்கியமானது. பேரிடர் காலங்களில் தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்களுடன் இணைந்து செயல்படுவது அவசியம். அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### நீண்ட அனுபவம் கொண்டவர்கள்

மழைக்கு முன்பாக அவர்களை ஒரு முறை அழைத்துப் பேசினால்கூட நமக்கு இன்றும் உதவியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் மக்கள் பணியில் நீண்ட அனுபவம் கொண்டவர்கள்.

பேரிடர் காலங்களில் அவர்கள்தான் மக்களின் கேள்விகளை நேரடியாக எதிர்கொள்ள இருப்பவர்கள். எனவே, அவர்களுடன் தொடர்பில் இருந்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு இணைந்து பணியாற்றுமாறு அதிகாரிகளை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரிகள் ஆய்வுக்குச் செல்லும்போது தயவுசெய்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளை உங்களுடன் அழைத்துச் செல்லுமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

### அத்தியாவசியப் பணிகள்

நிதி இல்லாததால் புதிய பணிகளை மேற்கொள்ள முடியாத மனநிலை உள்ளதை, மக்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, சென்னையைப் பொறுத்தவரை மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்குத்தான் முன்னிரிமை தரப்பட வேண்டும். அதனால்தான் மாநகராட்சி, சி.எம்.டி.ஏ, டபிள்யூ.ஆர்.டி, பி.டபிள்யூ.டி, மின்வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என அனைத்துத் துறைகளும் தங்களின் திட்டப் பணிகளுக்கான நிதியை கழிவுநீர்க்குழாய் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற மக்களின் அடிப்படை, அத்தியாவசியப் பணிகளுக்கு முன்னுரிமைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி, மாமன்ற உறுப்பினர்களுக்கான நிதியையும் இந்தத் திட்டப் பணிகளுக்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மெட்ரோ இரயில் பணிகள் பல இடங்களில் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளால் பெருமழையின்போது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையிலும் நாம் துரிதப்படுத்த வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டங்களை நானும், நம் அமைச்சர்களும் சேர்ந்து மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து மழைக்கானப் பணிகளை நேரில் ஆய்வுச் செய்ய உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தடுத்த ஆய்வுக் கூட்டங்களில் கள ஆய்வுகள் குறித்தத் தகவல்கள் உங்களுக்குத் தரப்படும். இந்த ஆய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து நடைபெற்று வரும் மக்கள் நலப் பணிகள் குறித்து, விரிவாக எடுத்துக்கூறிய அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மக்கள் பிரதிநிதிகள்

கடந்த ஆய்வுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தோம். இன்றைய இந்த ஆய்வுக் கூட்டம் குறித்து, நேற்று நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் இருந்த போதும், என்னோடும் சரி, அமைச்சர்களுடனும் சரி தொலைபேசியில் அழைத்து, இதைப் பற்றிக் கேட்டறிந்தார்.

சென்னையின் வளர்ச்சி, மேம்பாடு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள். இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து, முதலமைச்சர் அவர்களுக்கு அறிக்கை தரப்படும். எனவே, மழைக் காலத்திற்கு முன்பாக துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து மக்கள் பிரதிநிதிகளோடு இணைந்து பணிகளைச் செய்து முடிக்குமாறு கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

மாநகராட்சி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, சசிகாந்த் செந்தில், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி நிர்வாகத் துறையின் அரசு செயலாளர் கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., நீர்வளத் துறைச் செயலாளர் சமயமூர்த்தி ஐ.ஏ.எஸ்., சி.எம்.ஆர்.எல் சித்திக் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., சிறப்புத்திட்டத் செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் விஜய் ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பிரபாகர் ஐ.ஏ.எஸ்., மண்டலத் துணை ஆணையர், மாநகராட்சியின் மண்டலக்குழுத் தலைவர்கள், மாநகராட்சி குடிநீர் வாரிய பொறியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (04.09.2024) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்புப் பணிகள் தொடர்பாக சேவைத் துறைகளுடனான ஆய்வுக் கூட்டம், ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் சசிகாந்த் செந்தில் (திருவள்ளூர்), சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, கூடுதல்/இணை/துணை ஆணையாளர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக் குழு உறுப்பினர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற, நம் திராவிட_மாடல் அரசு எப்போதும் முன்னிலையில் செயலாற்றி வருகிறது. அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஆய்வுக் கூட்டத்தின்போது, மாவட்ட நிர்வாகம் சார்பில் 14 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் 17 பயனாளிகளுக்கு மின்னணு ரேஷன் அட்டைகள் (Smart Ration Cards) ஆகிய நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



வாழை படம் பார்த்த அனைவரையும் பசித்த சிவனணைந்தானாக்கியது! 'திரைப்படத்தின் வெற்றி' என்ற இலக்கைத் தாண்டி சமூகத்தில் 'வாழை' ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகளை சுட்டிக்காட்டி அதன் இயக்குநர் மாரி செல்வராஜை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளிம்பு நிலை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் வலிகளையும் அனுபவங்களின் வாயிலாகத் திரைமொழியில் பேசுகின்ற மாரி அவர்களின் கலை மென்மேலும் சிறக்கட்டும்! என்று வாழ்த்தினார்.